1994 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 483, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

483—

ராதாபுரம் மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டிட வசதி ஏற்படுத்துதல்.

* 24426—திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் மருத்துவமனையில் கூடுதல் படுக்கைகளுக்கான கட்டிடப் பணி செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம், தாலுக்கா தலைநகரமாக இருக்கின்ற காரணத்தாலே ஒவ்வொரு தொகுதியிலேயும் இந்த தாலுக்கா தலைநகர்களுக்கு 32 படுக்கைகள் கொண்ட கட்டட வசதிகளை ஏற்படுத்தித் தருவதாக அரசு அறிவித்திருந்தது. அதன்படி கட்டடப் பணிகள் நடப்பதாக நான் அறிய வருகின்றேன். அப்படி 32 படுக்கைகள் கொண்ட கட்டடங்கள் அங்கே கட்டி முடிக்கப் பட்டு, அது அவர்களுக்குப் பயன் தருகின்ற வகையிலே செயல் படத் துவங்கும்போது கூடுதல் மருத்துவர்களை நியமிக்கும் உத் தேசம் ஏதும் அரசிடம் உள்ளதா எனறு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 32 படுக்கைகள் என்று சொன்னால், அதற்குத் தகுந்த அளவிலே நார்ம்ஸ் இருக்கின்றன. 8 படுக்கை களுக்கு ஒரு மருத்துவர் என்று நார்ம்ஸ் வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே அமைப்பதற்கான நடவடிக்கையை மேற் கொண்டு வருகிறோம். ஆனால், இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில் தனியாக எத்தனைபேர் கூடுதலாக நியமிக்கப் படுவார்கள் என்பதைப்பற்றி இப்போதே என்னால் திட்டவட்ட மாகச் சொல்லமுடியாது. எதிர்காலத்தில் அதைப் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே மதிற் சுவர் இல்லாத காரணத்தினால் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு வருவதாக நான் இந்த மாமன்றத்தில் ஒரு முறை தெரிவித் திருந்தேன். இந்த மருத்துவமனையைச் சுற்றிலும் மதிற்சுவர் எழுப்பும் முயற்சியில் இந்த அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய நிதிநிலைமையை மனதிலே கொண்டு முடிந்தவரை இப்படிப்பட்ட சுற்றுச் சுவர் களைக் கட்டுவதைத் தவிர்த்து, அதற்கு ஆகின்ற செலவுகளை கட்டிடமாகக் கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்ற புதிய முறையை கடந்த கொஞ்ச ஆண்டுகளாக நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். சில ஆண்டுகளாக செய்து கொண் டிருக்கிறோம். எனவே, அந்த வகையில் சுற்றுப்புறச் சுவர் கட்டுவது என்பது கொஞ்சம் சிரமமான காரியம். ஆனால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் முயற்சி எடுக்கலாம். பல இடங் களில் இப்படிச் செய்திருக்கிறார்கள். நிறைய மருத்துவமனை களிலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களே சுற்றுப்புறச் சுவர்களைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். பல இடங்களில் கட்டடங்களைக் கூட கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அரசினுடைய சார்பாக நாம் கட்டடத்தைக் கட்டிக் கொண்டிருக் கிறோம். மூன்று மாதத்திற்குள் அங்கே யாரையாவது அணுகி சுற்றுப்புறச் சுவர் கட்டுவதற்கு நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களால் என்ன ஒத்துழைப்புத் தரமுடியுமோ, அந்த ஒத்துழைப்பைத் தரமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 484, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

484—

பாபநாசத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகக் கிளைப் பணிமனைக்குப் புதிய கட்டடம் கட்டுதல்.

*20456—திரு. ஆர். முருகையா பாண்டியன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், பாப நாசத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகக் கிளைப் பணி மனைக்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?